# <u>அவசர கூட்டம்</u>

1. தினகரன் நாகர்கோவில் நகர சிறப்பிதழ் பத்திரிகைக்கு இந்நகராட்சி பகுதிகளில் தற்போது நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்த விளம்பரம் செய்த வகைக்கு ரூ.18000/– தினகரன் நாளேட்டிற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 5544/2015/இ3

**தீர்மான எண் : 302 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சியில் வார்டு எண்.15–ல் வாகையடி தெருவில் அலங்கார நீர் ஊற்று அமைத்தல் வேலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல் முறை எண்.ஆ3/2734/2014 நாள். 23.09.2014–ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதற்கிணங்க 28.10.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு. K. நடராஜன் – 0.06% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>–** வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.06% குறைவு விகிதம் கோரிய ஒப்பந்தக்காரர் திரு. K. நடராஜன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். 57/14–15/இ3

**தீர்மான எண் : 303 – அனுமதிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள உயர் கோபுர மின் விளக்குகள் 58 எண்ணம் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்ய இரண்டாவதாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. திரு. G. ராஜன் ஒப்பந்தக்காரர் – மதிப்பீட்டைவிட 22 % குறைவு
2. ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி – மதிப்பீட்டைவிட 28.15 % குறைவு
3. அலிக்கை எண்டர்பிரைசஸ் உடுமலைபேட்டை – மதிப்பீட்டைவிட 9.12 % குறைவு
4. மலானி லைட்டிங கம்பெனி திருநெல்வேலி – முன் வைப்புத்தொகை செலுத்தி வழஙகப்படவில்லை

**<u>அலுவலக குறிப்பு</u>–** 1. வரிசை எண்.4 மலானி லைட்டிங கம்பெனி முன் வைப்பத்தொகை செலுத்தாததால் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கலாம்.

2. வரிசை எண்.1,2, மற்றும் 3 ஒப்புநோக்கு பட்டியல் படி L-1 ஒப்பந்தப்புள்ளியான ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி மதிப்பீட்டைவிட 28.15 % குறைவாக கொடுத்துள்ளதால் Engineering Manual for Urban Local badies Tamil Nadu Vol I Page No:8 Section 2.7.1–ன் படி மிகக்குறைவான தொகையைக் குறிப்பட்டுள்ள மேற்படி ஒப்பந்தப்புள்ளியின் படி பணியை சிறப்பாகச் செய்ய முடியாது என கருதப்படுவதால் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்கல்ஸ், திருநெல்வெலி மதிப்பீட்டைவிட 28.15 % குறைவாக கொடுத்துள்ளதை நிராகரிக்கலாம் அடுத்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியான L 2 திரு. G.ராஜன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட22 % குறைவாக கொடுத்துள்ளதை அனுமதிக்கலாம் என நகராட்சிப் பொறியாளர் அறிக்கை செய்யப்பட்டுள்ளதன் படி மன்றம் அனுமதிக்கலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி விளம்பரபடுத்திய வகைக்கான விளம்பர கட்டணம் செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 17333/2014/இ4

**தீர்மான எண் : 304 – மதிப்பீட்டைவிட 28.15% குறைவு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீகஙகா எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி ஒப்பந்தத்தை அனுமதிக்க மன்றம் முடிவு செய்யப்பட்டது.**

4. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் சந்தோஷ் நகரில் 3" குழாய் பதித்து கழிவுநீர் ஓடை கட்டி தார்தளம் அமைக்க ரூ.13,60,000/–க்கு மதிப்பீடு எண். 1238 நாள்.24.08.2012–ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு. மரியஜாண் ஒப்பந்தக்காரர் முலம் ரூ.10,48,475/–க்கு மேற்படி இடத்தில் வேலை செய்து முடிக்கப்பட்டது. மதிப்பீட்டுத் தொகையில் மீதமுள்ள பணத்தில் அதே வார்டில் மிகவும் மோசமான நிலையில் உள்ள சாலையான பரமார்த்தலிங்கபுரம் மீன் கடை தெரு மற்றும் கேசவதிருப்பாபுரம் 7 A எதிர்புறம் உள்ள தெருவில் தார் தளம் அமைக்க நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதன்படி மீதமுள்ள தொகை ரூ.3,11,525/–க்கு மேற்படி இடத்தில் தார்தளம் அமைக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 285/12–13/இ1

**தீர்மான எண் : 305 – அனுமதிக்கப்பட்டது.**

5 இந்நகராட்சியின் 2015–2016–ம் ஆண்டு உத்தேச வரவு செலவு மற்றும் 2014–2015–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு, செலவு திட்ட அறிக்கை புத்தக வடிவில் 70 எண்ணம் தயார் செய்வதற்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

1. சொர்ண பிரிண்டர்ஸ் – ரூ.15690/–
   பத்தல் விளை
2. S.S.ஆப்செட் – ரூ.14428/–
   மீனாட்சிபுரம்
3. ஜோஸி பிரிண்டர்ஸ் – ரூ.13380/–
   கணேசபுரம்

<u>அலுவலக குறிப்பு</u>– 1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜோஸி பிரிண்டர்ஸ் கணேசபுரம் நிறுவனத்தின் தொகை ரூ.13380/– வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2318/2015/பி4

**தீர்மான எண் : 306 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான வடிவீஸ்வரம் தாய், சேய் நல விடுதிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள கடை எண்.1,2,3,4 –ன் 05.07.2011–ம் தியதிய முன் ஏல நடவடிக்கையில் கடை எண்.4–ற்கு ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த திரு. T. கண்ணன் என்பவரால் மதுரை உயர் நீதி மன்றக்கிளையில் தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக திருமதி. ஸ்ரீமதி அவர்கள் ஆஜராகிடவும், அதற்கான செலவினத்திற்கும் நகர் மன்ற தீர்மானம் எண்.636 நாள்.15.09.2011–ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டிருந்தது. இந்நிலையில் மேற்படி வழக்கு நாளது வரை முடியவில்லை என்பதுடன் 30.08.2011–ல் பெறப்பட்டு பிரிக்கப்படாத ஒப்பந்தப்புள்ளியினை திறந்து மேல் நடவடிக்கை எடுக்கலாமா என்பது குறித்த சட்ட கருத்துரை கோரப்பெற்றும்

கிடைக்கப்பெறவில்லை. எனவே Change of Vakcalat கொடுத்து மேற்படி வழக்கில் திரு. ஆதிமூலபாண்டியன் அவர்கள் ஆஜராகவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அனுமதிக்கலாம். கோப்பு எண். 582/2011/அ13

**தீர்மான எண் : 307 – அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு சம்மந்தமாக சாலை அமைத்தல், வாட்டர் டேங்க், பொது குழாய், கல்வெர்ட், போர்வெல், டிரான்ஸ்பார்மர், Garbage area, Dumber bin,மற்றும் Public Toilet ஆகியவற்றை Geo- Spatial தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அவை இருக்கும் இடத்தினை துல்லியமாக அடையாளம் காணவும், மேலும் ஒவ்வொரு சாலை, இணைப்பு சாலை, குறுக்கு சாலையின் அளவினை துல்லியமாக கண்டறிந்து கணனி தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி Municipal Asset Map –னை உருவாக்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரு.6,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 005876/2015/இ1

**தீர்மான எண் : 308 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள காமராஜ் 5 மாடி கட்டிடத்தின் முதல் தளத்தில் மாத வாடகை ரூ.12146/–ல் இயங்கி வந்த கடை குத்தகைதாரர் நகராட்சிக்கு செலுத்தப்படவேண்டிய வாடகை நிலுவையினை செலுத்தப்படாததால் மேற்படி கடையினை 13.05.2014 அன்று பூட்டி கையகபடுத்தப்பட்டதாக வருவாய் ஆய்வரின் 25.07.2014–ம் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடையினை தரைதளத்தில் உள்ள கடைக்கு ஆணையர் உத்தரவு படி 15 % உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையினை அடிப்படையாக கொண்டு கடந்த கால வாடகையில் 15 % உயர்வு செய்து மாதவாடகை ரூ.13968/– என நிர்ணயம் செய்து மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் அலுவலகம் வழி தினசரி நாழிதழில் விளம்பரம் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரிடவும், விளம்பர செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 12371/2014/அ13

**தீர்மான எண் : 309 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தில் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக அசைவை ஹோட்டல் குத்தகைதாரர் திரு. P. மாகீன் என்பவரால் தொடரப்பட்ட W.P (MD) No: 9700/2012 என வழக்கிற்கும் மற்றும் W.P (MD) No: 495/2015 வழக்கிற்கும் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.7500/– வீதம் 2 வழக்குகளுக்கு ஆகும் மொத்த செலவுத்தொகை ரூ.15,000/–ஐ திரு. P. ஆதிமூலபாண்டியன் நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙகிட மன்ற அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண். 4733/2008/அ13

**தீர்மான எண் : 310 – அனுமதிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சிக்குட்பட்ட தம்மத்துக்கோணம் ஞானம்நகர் குடியிருப்போர் நலச்சங்கம் அருகில் கலையரங்கம் கட்ட பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2014–15–ன் கீழ் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நடவடிக்கைகள் செயல் முறை எண்.ஆ3/2975/2014 நாள்.28.01.2015–ன் படி நிர்வாக அனுமதி வழகியதற்கிணஙக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>ஓப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு. V. ஜோசப் அருள்ராஜ் – 6.92% குறைவு
2. திரு. V. ஆன்றனி சுரேஷ் – 2.65% குறைவு
3. திரு. T நேசமணி – 1.15% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>**– 1. வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. V. ஜோசப் அருள்ராஜ் என்பவர் மதிப்பீட்டைவிட 6.92% குறைவாக கொடுத்துள்ளதால் முன் வைப்புத் தொகை ரூ.8000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 264/14–15/இ3

**தீர்மான எண் : 311 – அனுமதிக்கப்பட்டது.**

11. பிறப்பு / இறப்பு சான்றுகளுக்கான விண்ணப்ப படிவம் மற்றும் பிறப்பு/ இறப்பு சான்றுகள் தொடர்பான கட்டணஙகள் பழைய விகிதத்திலேயே சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகின்றது. மேற்படி சான்றுகள் தயாரிப்பதற்கான பேப்பர், எழுது பொருட்கள், பிரிண்ட் எடுப்பதற்கான செலவினம், பணியாளர்களின் ஊதியம் ஆகியவை பலமடஙகு அதிகமாகி விட்டது. எனவே சம்மந்தப்பட்ட நிர்வாக செலவினஙகளை ஓரளவிற்கேனும் ஈடுகட்டும் விதமாக பிறப்பு/இறப்பு சான்றுகளுக்கான விண்ணப்ப படிவம் ரூ.10/– எனவும் பிறப்பு/இறப்பு சான்றுகள் பிரதி ஒன்றிற்கு ரூ.40/– எனவும் பிறப்பு/இறப்பு சான்றுகளில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான மனுக்களை பரிசீலனை செய்வதற்கான சேவைக் கட்டணம் ரூ.100/– என நிர்ணயம் செய்யவும் குழந்தை பிறந்தவுடன் வழஙகப்படும் பிறப்பு சான்றில் ஒரு நகல் இலவசமாக வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**– அனுமதிக்கலாம். கோப்பு எண். 2268/2015/எச்3

**தீர்மான எண் : 312 – ரத்து செய்யப்பட்டது.**

12. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள், வால்வுகள், பொது குழாய்களில் உள்ள பழுது வேலைகளை உடனுக்குடன் சரி செய்தவற்கு ZONE III. –ல் உள்ள பகுதிகளான வார்டு எண். 9,10,11,12,13,14,32,33,34,35,44,45 மற்றும் 46 –க்கு பணிகள் செய்வதற்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>ஓப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு. A பாண்டியன் – 1% EMD not Submitted Municipal TenderBox
2. திரு. T. துரை – 24.99% குறைவு
3. திரு. I. சோமசேகரன் – 18.53% குறைவு
4. திரு. P கிருஷ்ணன் – 10.05% குறைவு

**அலுவலக குறிப்பு–** E Tender மூலம் வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் முன் வைப்புத் தொகை மற்றும் தொழில்நுட்ப சான்றிதழ் எதுவும் நகராட்சி டெண்டர் பெட்டியில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளி நீக்கம் செய்யப்பட்டு வரிசை எண்.2,3 மற்றும் 4 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 24.99% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. T. துரை என்பவர் முன் வைப்புத் தொகை ரூ.1,48,000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 278/14–15/இ2

**தீர்மான எண் : 313 – அனுமதிக்கப்பட்டது.**

13. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள், வால்வுகள், பொது குழாய்களில் உள்ள பழுது வேலைகளை உடனுக்குடன் சரி செய்தவற்கு ZONE II. –ல் உள்ள பகுதிகளான வார்டு எண். 4,5,6,7,8,29,30 மற்றும் 31 –க்கு பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. திரு. T. துரை – 24.99% குறைவு
2. திரு. I. சோமசேகரன் – 16.79% குறைவு
3. திரு. P கிருஷ்ணன் – 10.05% குறைவு

**அலுவலக குறிப்பு–** வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. T. துரை என்பவர் மதிப்பீட்டை விட 24.99% குறைவாக கொடுத்துள்ளதால் முன் வைப்பத் தொகை ரூ.1,48,000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙக அனுமதிக்கலாம். கோப்பு எண். 277/14–15/இ2

**தீர்மான எண் : 314 – அனுமதிக்கப்பட்டது.**

14. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள், வால்வுகள், பொது குழாய்களில் உள்ள பழுது வேலைகளை உடனுக்குடன் சரி செய்தவற்கு ZONE V –ல் உள்ள பகுதிகளான வார்டு எண். 21,22,23,24,25,41 மற்றும் 43 –க்கு பணி செய்வதற்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. திரு. R. குமார் – 51.42% குறைவு
2. திரு. P கிருஷ்ணன் – 10.05% குறைவு
3. திரு. T. துரை – 6.07% குறைவு
4. திரு. T. தஙகபாண்டியன் – 2.20% குறைவு

**அலுவலக குறிப்பு–** E Tender மூலம் வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 51. 42% குறைவு விகிதம் கோரிய ஒப்பந்தக்காரர் திரு. R. குமார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி 25.00% –க்கு மேல் கூடுதல் உள்ளதால் பொறியாளர் கையேடு 2.7.1–ன் படி அதற்கு அடுத்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்தக்காரர் திரு. P கிருஷ்ணன் என்பவர் மதிப்பீட்டை விட 10.05% குறைவாக கொடுத்துள்ளதால் முன் வைப்புத் தொகை ரூ.24,000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 280/10–11/இ2

**தீர்மான எண் : 315 – அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள், வால்வுகள், பொது குழாய்களில் உள்ள பழுது வேலைகளை உடனுக்குடன் சரி செய்தவற்கு ZONE IV –ல் உள்ள பகுதிகளான வார்டு எண். 15,16,17,18,19,20,36,37,47,48,49,50 மற்றும் 52 –வது வார்டுகளில் பணி செய்வதற்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. திரு. V. மாதவன் – 14.88% குறைவு
2. திரு. P கிருஷ்ணன் – 10.05% குறைவு

**அலுவலக குறிப்பு–** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. V. மாதவன் என்பவர் மதிப்பீட்டை விட 14.88% குறைவாக கொடுத்துள்ளதால் முன் வைப்புத் தொகை ரூ.24,000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கலாம். கோப்பு எண். 279/14–15/இ2

**தீர்மான எண் : 316 – அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் காமராஜ் 5 மாடி கட்டிடம் மற்றும் சவுத் இந்தியன் மெடிக்கல்ஸ்–க்கு இடைப்பட்ட காலியிடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை நிரந்தரமாக முடிவிற்கு கொண்டு வருபதுடன், நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு மேற்படி இடத்தினை பொது ஏல நடவடிக்கைக்குட்படுத்த நகர் மன்ற தலைவர் தமது 24.04.2012–ம் தியதிய கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து, அரசு மதிப்பு நிர்ணயம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டதில் மாத வாடகை ரூ.550/– என அரசு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதை தொடர்ந்து பொது ஏலம் 30.05.2012 அன்று நடத்தப்பட்டதில் திரு. S.அஜீசெல்வம், 52–A/1/1, வாத்தியார்விளை, கிருஷ்ணன்கோயில் என்பவரால் மாத வாடகை ரூ.7,200/–க்கு உயர்ந்த பட்சமாக கோரப்பெற்றதை தொடர்ந்து நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பெற்றதில் மன்றம் தனது தீர்மானம் எண்.1132 நாள்.29.06.2012–ல் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்படைக்க மன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நலையில் திரு. அஜீசெல்வம் என்பவர் தமக்கு இடம் ஒதுக்கி தரப்படவில்லையென தெரிவித்ததனை தொடர்ந்து நகரமைப்பு ஆய்வரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இடம் ஏற்கனவே பொது ஏலம் மூலம் ஒப்படைக்கப்பட்ட விஜய் ஹோட்டலுக்கு பாத்யப்பட்டது என அறிக்கை வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி ஏல நடவடிக்கையினை ரத்து செய்து மேற்படியார் செலுத்தப்பட்டவைப்பு தொகையினை திரும்ப வழங்கிட மன்ற அனுமதி கோரப்பெற்றதில் மன்றம் தனது 27.06.2014–ம் தியதிய தீர்மானம் எண்.499–ல் மேற்படி இடம் தொடர்பாக எவ்வித மறுப்புரையும் நாளது வரை வரப்பெறாததால் மேற்படி இடத்தினை ஒப்படைக்கவே மீண்டும் அனுமதி வழங்கியது.

இந்நிலையில் மேற்படி இடம் தமக்கு பாத்யப்பட்டதுதான் என விஜய்ஹோட்டல் உரிமையாளர் தமது 31.10.2014–ம் தியதிய மனுவில் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

மேற்காண் நிலையில் குத்தகைதாரர் திரு.S. அஜீசெல்வம் என்பவர் சுமார் 7 மாதஙகள் கடந்த பின்பும் தமக்கு கடை ஒப்படைக்கப்படவில்லையெனவும், அண்ணா பேருந்து நிலையத்தில் கடை தந்து உதவிடுமாறும் மீளவும் கோரப்பெற்றதனை தொடர்ந்து வருவாய் ஆய்வர் குறிப்பு பெறப்பட்டதில் கீழ்கண்ட குறிப்பு பெறப்பட்டுள்ளது.

"அண்ணா பேருந்து நிலைய தரைப்பாக கடை சம்பந்தமாக பிரதர்ஸ் பவுண்டேசன், கண்டன்விளை, கன்னியாகுமரி மாவட்டம் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP (MD) No: 7939/2012–ன் மீதான 28.06.2012–ம் தியதிய தீர்ப்பில் இனி வருங்காலங்களில் பேருந்து நிலையத்தில் எந்த மாற்றமும் செய்ய வேண்டுமானால் மண்டல போக்குவரத்து அதிகாரக்குழு (Regional Transport authority) அதன் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர்அனுமதி பெற்றுதான் செய்யப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தற்போது அண்ணா பேருந்து நிலையத்தில் கடைகள் ஏதுவும் காலி இல்லை"

எனவே மேற்காண் நிலையில் ஏற்கனவே மதுரை உயர் நீதிமன்றக்கிளை தீர்ப்பாணையின் பேரில் காலி செய்யப்பட்ட கடைகள் இருந்த இடத்தில் அல்லாது வேறு இடம் கண்டறிந்து கடை ஒப்படைக்க வாய்பிருப்பின் ஒப்படைப்பது (அல்லது) மேற்படி ஏலத்தினை ரத்து செய்து வைப்பு தொகையினை மீள திரும்ப வழங்குவது குறித்து பரிசீலித்து முடிவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

கோப்பு எண். 5350/2008/அ13

**தீர்மான எண் : 317 – மதுரை உயர்நீதிமன்ற கிளை வழக்கு எண் WP(MD) No:7939/2012- ன் தீர்ப்பாணை 100% பொது மக்கள் நலன் கருதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை என்பதனை கருத்திற்காண்டு மேற்படி தீர்ப்பாணைக்கு வலு சேர்க்கும் விதமாக ஏற்க்கனவே தரைப்பாக பெட்டி கடைகள் இருந்த இடத்தில் கடை அமைக்க அனுமதிக்க இயலாது என்பதால் கட்டுமான அமைப்பினை ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மன்றம் முடிவு செய்திடலாம் என்பதால் நகராட்சிக்கு வருவாய் ஈட்டிடும் நோக்கில் ஏற்க்கனவே ஏலம் விட்டு மன்றத்தில் முடிவு செய்யப்பட்டு ஏல நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதி வழஙகியுள்ளதை கருத்திற்கொண்டு கட்டுமான அமைப்பான போக்குவரத்து சமய குறிப்பாளர் அறைக்கு அருகில் தற்போது பயன்பாடு இல்லாத காலியான அறையை மேற்படி குத்தகையினை தொடர அனுமதிப்பது என ஏகமனதாக மன்றம் பரிசீலித்து முடிவு செய்யப்பட்டது.**

17. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் கொம்மண்டையம்மன் கோவில் வழியாக செல்லும் காஙகேயன் ஓடை கழிவுநீர் விவசாய நிலஙகளுக்கு சென்று பாதிப்பு ஏற்படுத்துவதால் ஓடையின் இரண்டு பக்கமும் தடுப்புச்சுவர் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.90,00,000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அரசு மானியம் பெற்று பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 002880/2015/இ1

**தீர்மான எண் : 318 – அனுமதிக்கப்பட்டது.**

18. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1–ல் உள்ள காந்தி நகர் சானல் கரை மற்றும் காமராஜர் காலனியில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்க மதிப்பீடு எண்.234/13–14 நகர் மன்ற தீர்மானம் எண்.3167 நாள்.02.09.2013–ன் படி பணி மேற்கொள்ள ரூ.9,75,000/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. மேற்படி இடத்தில் இதுவரை ஆக்கிரமிப்பு அகற்றி தரவில்லை. எனவே அதற்கு பதிலாக அதே வார்டுக்கு உட்பட்ட அருகாமையில் உள்ள பகுதிகளான பஞ்சபாண்டவர் கோயில் சாலையில் Bitumen macadam சாலை அமைக்க நகர்மன்ற உறுப்பினர் கோரியுள்ளதால் மேற்படி பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம். கோப்பு எண். 234/13–14/இ1

**தீர்மான எண் : 319 – அனுமதிக்கப்பட்டது.**

19. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25–ல் உள்ள கே.பி. ரோட்டில் உள்ள இம்மானுவேல் தெருவில் தார்சாலை அமைக்க நகர் மன்ற தீர்மானம் எண்.1497 நாள்.21.11.2012–ன் படி ரூ.6.60/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டது. மேற்படி பகுதியானது மண் தரையாக இருப்பதால் அப்பகுதியில் இரண்டு அடுக்கு ஜல்லி வைத்து தார்சாலை அமைக்க வேண்டி உள்ளதால் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ரூ.6,60,000/– செலவில் W.B.M தார்சாலை அமைக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 381/13–14/இ1

**தீர்மான எண் : 320 – அனுமதிக்கப்பட்டது.**

20. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48–ல் சரலூார் மீன் சந்தையில் காலியாக உள்ள இடத்தில் குத்தகை அனுபவிக்கும் உரிமம் திரு. V.ஆசீர் எட்வின் என்பவருக்கு 01.04.2012 முதல் 31.03.2015 முடிய ஒப்படைக்கப்பட்டிருந்தது. தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை (நிலை) எண்.92 நாள்.03.07.2007–ன் படி மேற்படி கடைக்கு 01.04.2015 முதல் 31.03.2018 வரை மேலும் மூன்றாம் காலம் உரிமம் புதுப்பித்து தரக்கோரி புதுப்பித்தல் கட்டணம் ரு.1000/– செலுத்தி குத்தகைதாரரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேறப்டி இடத்தில் ஏதேனும் அபிவிருத்தி/ பராமத்துப் பணிகள் செய்யப்பட உள்ளதா என பொறியியல் பிரிவில் குறிப்பு கோரப்பெற்றதில், மேற்படி மீன் சந்தை வளாகத்தில் புதிதாக Fish Market கட்ட ரூ.83.60/– லட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு கருத்துரு அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கட்டுமானப் பணி தொடங்கப்படும் நிலையில் மாற்று இடம் வழஙக சாத்தியமிருப்பின் வழஙகப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு உரிமம் புதுப்பித்து வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 22722/2011/அ13

**தீர்மான எண் : 321 – அனுமதிக்கப்பட்டது.**

21. இந்நகராட்சிக்குட்பட்ட ஒழுகினசேரி பகுதியில் புல எண்.C20/1-ல் உள்ள கடைகளை அகற்றக்கூடாது என திரு. A. சந்திரன் என்பவர் மாவட்ட முதன்மை நீதி மன்றம் நாகர்கோவிலில் வழக்கு O.S.86/2015 தொடர்ந்ததுள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக்கி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்த நகராட்சி வழக்கறிஞர் திரு. நாகராஜன் அவர்களிடம் வழக்கினை ஒப்படைக்கவும், வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 5732/2015/எப்1

**தீர்மான எண் : 322 – அனுமதிக்கப்பட்டது.**

22. இந்நகராட்சிக்குட்பட்ட வாட்டர் டாஙக் ரோடு கேசரி தெரு சர்வே எண்.E5/14 ஓடைபுறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற திரு. S. காசிநாதன் மற்றும் திரு. S. சோமசுந்தரம் என்பவர்கள் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக்கி வழக்கு O.S.363/2011 நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ளார்கள் மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக்கி வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கிடை செலவுகளுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 013951/2011/எப்1

**தீர்மான எண் : 323 – அனுமதிக்கப்பட்டது.**

23. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் கீழ்காணும் வாகனஙகளுக்கு 2015–2016–ம் ஆண்டிற்கு எரி பொருள் வாஙகுவதற்கு உத்தேச செலவினம் ரூ.60,00,000/– ஆகும் மேற்படி செலவினத்திற்கும், அதனை பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>வாகனஙகள் விபரம்</u>

1. TN 74 M – 3116
2. TN 74 S – 9273
3. TN 74 S – 9338
4. TN 74 L – 5163
5. TN 74 L – 5160
6. TN 74 L – 5166
7. TN 74 L – 5137
8. TN 74 L – 5167
9. TN 74 D – 2217
10. TN 74 K – 9581
11. TN 74 AC – 8029
12. TN 74 AC – 8049
13. J.S 200 பொக்கிலீன்
14. TN 74 D – 0199

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 19167/2014/எச்2

**தீர்மான எண் : 324 – அனுமதிக்கப்பட்டது.**

24. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கழிவு நீர் அகற்றும் வாகனம் ஒன்று மட்டுமே உள்ளது. நகராட்சி பகுதிகளில் மேற்படி வாகனம் மூலம் கழிவுநீர் அகற்றப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி வாகனம் வருடாந்திர தகுதி சான்று பெற இருப்பதால் பழுது நீக்கம் செய்யவும் காலஙகளில் கழிவு நீர் தேஙகி பொது சுகாதார கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மேற்படி பொது சுகாதாரக் கேடு ஏற்படாத வகையில் தடுக்க மாற்று வாகனமாக தனியார் வாகனம் முலம் மேற்படி பணியினை செய்ய தனியார் வாகனத்திற்கு 06.04.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பெற்றதில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் முகவரி | ஒரு ட்ரிப்க்கான தொகை ரூ |
|---|---|---|
| 01. | A. JERALDMAJULA<br>17/8, Puthukudierruppu<br>Nagercoil | 3200/– |
| | S. JOSEPHMICHEAL RAJ<br>PALLAVILAI | 3300/– |

<u>அலுவலக குறிப்பு</u>– 1) மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய A. ஜெரால்ட்மார்ஜிலா என்பவருக்கு வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 20823/2011/எப்1

**தீர்மான எண் : 325 – அனுமதிக்கப்பட்டது.**

25. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பொது சுகாதாப் பிரிவு வாகனஙகளுக்கு 2015–2016–ம் ஆண்டிற்குறிய வரி, காப்பீட்டு கட்டணம், தகுதி சான்று கட்டணம் மற்றும் ஏனைய மாத கட்டணஙகள் செலுத்த உத்தேச செலவீனம் ரூ.5,00,000/– ஆகும். மேற்படி செலவு தொகை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

**<u>வண்டி எண்கள்</u>**

1. TN 74 M – 3116
2. TN 74 S – 9273
3. TN 74 S – 9338
4. TN 74 L – 5163
5. TN 74 L – 5160
6. TN 74 L – 5166
7. TN 74 L – 5137
8. TN 74 L – 5167
9. TN 74 D – 2217
10. TN 74 K – 9581
11. TN 74 AC – 8029
12. TN 74 AC – 8049
13. J.S 200 பொக்கிலீன்
14. TN 74 D – 0199

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 09881/2012/எச்2

**தீர்மான எண் : 326 – அனுமதிக்கப்பட்டது.**

26. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட 9 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல் பம்புசெட்டுகளிலுள்ள பழுதுகளை சரி செய்து ஆகும் உத்தேச செலவு ரூ.79,750/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | **<u>வார்டு எண். 6 சி.பி.ஹெச் ரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் II</u>**<br>பழுதுபட்ட 1.5 குதிரை வேக "(4) ‘‘சப்மெர்சிபிள் பம்புசெட்டை தூக்கிவிட்டு புதிய 1.5 குதிரை வேக "(4) ‘‘சப்மெர்சிபிள் பம்புசெட்டை இறக்கி இயக்குதல். | ரூ<br>4900/– |
| II | **<u>வார்டு எண் 7 அறுகுவிளை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் (சி.எஸ்.ஐ.சர்ச் எதிர்புறம்)</u>**<br>1.5 குதிரை வேக "(4) ‘‘ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 9400/– |
| III | **<u>வார்டு எண் 7 கீழகலுஙகடி அடிசனல் புதிய போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>1.5 குதிரை வேக "(4) ‘‘சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் . | 9050/– |
| IV | **<u>வார்டு எண் 11 வடிவீஸ்வரம் அண்ணாநகர் போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>1.5 குதிரை வேக "(4) ‘‘ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 9350/– |
| V | **<u>வார்டு எண் 14 காந்திகாலனி அடிசனல் புதிய போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>** | 9800/– |

| | | |
|---|---|---|
| | 1.5 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | |
| VI | **<u>வார்டு எண் 14 பூசாத்தான்குளம், கலைவாணர்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>1.5 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட் பழுது பார்த்து இயக்குதல். | 9350/– |
| VII | **<u>வார்டு எண் 29 கிருஷ்ணன்கோவில் வெள்ளாளர் கீழத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>1.5 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 9300/– |
| VIII | **<u>வார்டு எண் 29 வடசேரி பயோனியர் தெரு (பிள்ளையார் கோவில் தெரு) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>1.5 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட், ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல். | 8900/– |
| IX | **<u>வார்டு எண் 29 சி.பி.ஹைச் ரோடு வண்ணார்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம்</u>**<br>1.5 குதிரை வேக “(4) “ சப்மெர்சிபிள் பம்புசெட் பழுது பார்த்து இயக்குதல். | 9700/– |
| | **மொத்தம்** | 79750 |

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 005472/2015/இ2

**தீர்மான எண் : 327 – அனுமதிக்கப்பட்டது.**

27. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31–ல் பாலமோர் ரோட்டில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கம் முன்பு இருக்கை வசதியுடன் கூடிய பயணிகள் நிழற்குடை அமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2014–15–ன் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செயல் முறை எண்.ஆ3/2734/2014 நாள்.11.02.2015–ன் படி நிர்வாக அனுமதி வழஙகியதற்கிணஙக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு. T. வீரமணி – 6.09% குறைவு
2. திரு. S செல்லம் – 1.50% குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>–** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. T. வீரமணி என்பவர் மதிப்பீட்டை விட 6.09% குறைவாக கொடுத்துள்ளதால் முன் வைப்புத் தொகை ரூ.6000/–ம் செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழஙக அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 275/14–15/இ3

**தீர்மான எண் : 328 – அனுமதிக்கப்பட்டது.**

28. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை சுத்திகரிப்பு நிலைய நீர்த்தேக்க தொட்டி மற்றும் முனிசிபல் ஆபிஸ் வளாகம், அனாதைமடம், ஆசீர்வாதம் நகர் கிறிஸ்துநகர் புதிது மற்றும் பழையது, ஹவுசிங போர்டு மறவன் குடியிருப்பு, சூரஙகுடி, காளை சந்தை, தட்டான்விளை மற்றும் நகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட அனைத்து நீர்த்தேக்க தொட்டியினை சுத்தம் செய்யவும் மற்றும் நகராட்சிக்கு உட்பட்ட 52 வார்டுகளிலும் குடிநீர் கட்டணம் செலுத்தாத வீடுகள் மற்றும் தொழில் நிறுவனஙகளில் உள்ள குடிநீர் இணைப்பினை துண்டிப்பு செய்ய 13 உதவியாளர்களை மூன்று மாதஙகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்தல் வேலைக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>

1. திரு. T. துரை – மதிப்பீட்டுத் தொகை
2. திரு. D ராஜாசுவாமி – 2.78% அதிகம்

**<u>அலுவலக குறிப்பு</u>– 1)** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகை கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. T. துரை என்பவரது ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 255/14–15/இ2

**தீர்மான எண் : 329 – அனுமதிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள வார்டுகளில் புதிதாக செய்யப்பட வேண்டிய பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுத்தொகை படி பொது நிதியிலிருந்து பணிகள் மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு 6 அறுகுவிளை புதுத்தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 0.30 |
| 2. | வார்டு 9 பாறைக்கால் பண்டு வடக்கு பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் | 10.50 |
| 3. | வார்டு 32 மேலசூரஙகுடி முத்தாரம்மன் கோவில் தெருவில் பேவர் பிளக் அமைத்தல் | 5.50 |
| 4. | வார்டு 23 கீழ ஆசாரிபள்ளத்தில் தடுப்பு சுவர் கட்டுதல் | 5.00 |
| 5. | வார்டு 24 ராஜலெட்சுமி நகரில் தார் சாலை அமைத்தல் | 9.70 |
| 6. | வார்டு 24 கோட்டவிளை தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 4.80 |
| 7. | வார்டு 28 பவுல் தெரு மற்றும் சாஸ்தான் கோவில் தெருவில் கழிவு நீர் ஓடை அமைத்தல் | 15.00 |
| 8. | வார்டு 28 புதுகுடியிருப்பு குறுக்குதெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 9.90 |
| 9. | வார்டு 29 வெள்ளாளர் மேலத்தெரு மற்றும் பிள்ளையார் கோவில் தெருவில் தார் தளம் அமைத்தல் | 6.90 |
| 10. | வார்டு 33 ஆயுர்வேத கல்லூாரி அருகில் கல்வெட்டு அமைத்தல் | 4.80 |
| 11 | வார்டு 33 ஈஸ்வரபுரம் கழிவு நீர் ஓடை சரி செய்தல் | 7.50 |

| | | |
|---|---|---|
| 12. | வார்டு 35 செட்டிய தெருவில் மழைநீர் வடிகால் அமைத்து கவர் ஸ்லாப் அமைத்தல் | 10.00 |
| 13. | வார்டு 35 செட்டியதெருவில் மழைநீர் வடிகால் அமைத்து பேவர் பிளாக் அமைத்தல் | 7.00 |
| 14. | வார்டு 40 ஈத்தாமொழி ரோடு மறவன் குடியிருப்பில் கழிவு நீர் ஓடை அமைத்தல் | 3.20 |
| 15. | வார்டு 48 சரலூார் பார்க் நவீனபடுத்தி இருக்கைகள் அமைத்து காம்பவுண்ட் சுவர் கட்டுதல் | 8.00 |
| 16. | வார்டு 48 சரலூாரில் கழிவு நீர் ஓடை கட்டுதல் | 7.00 |
| 17. | வார்டு 3 பிரம்மசக்தி அம்மன் கோவில் தெரு, ரேசன் கடைத்தெரு, பாரதியார் தெரு ஆகியவற்றில் பேவர் பிளாக் அமைத்தல் | 19.25 |
| 18. | வார்டு 8 தழுவிய மகாதேவர் கோவில் தெரு பேவர் பிளாக் அமைத்தல் | 8.30 |
| 19 | வார்டு 8 தழுவிய மகாதேவர் கோவில் முன்பு தண்ணீர் தொட்டி அமைத்தல் | 3.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2845/2014/இ1

**தீர்மான எண் : 330 – வரிசை எண்.3–ல் வார்டு எண். 22 என திருத்தம் செய்தும் வரிசை எண்.7–ல் ஓடை அமைத்தல் மற்றும் பேவர் ப்ளாக் செய்தல் எனவும், திருத்தம் செய்து அனுமதிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சிபகுதிக்குட்பட்ட கீழ்காணும் வார்டுகளில் சாலைகள் மற்றும் தெருகளில் மராமத்து பணிகள் அரசு நிதி மற்றும் SJSRY திட்டத்தில் பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசு நிதி கிடைக்கப்பெறாதாலும், SJSRY திட்டத்தில் நிதி இல்லாததாலும் நகராட்சி பொது நிதியிலிருந்து பணி மேற்க்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| **வ. எண்** | **பணி விபரம்** | **மதிப்பீடுத் தொகை ரூ (இலட்சத் தில்)** |
|---|---|---|
| 1. | வார்டு 2–ல் திருவள்ளுவர் தெருவில் சமுதாய நல கூடம் கட்டுதல் | 4.00 |
| 2. | வார்டு 6 –ல் கைலாஷ் கார்டன் பகுதிகளில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் | 11.80 |
| 3. | வார்டு 8–ல் சக்தி நகர் குறுக்குத்தெருவில் மழைநீர் வடிகைால் ஓடை மற்றும் வேபர் பிளாக் அமைத்தல் | 9.80 |
| 4. | வார்டு 9–ல் போலீஸ் ஸ்டேசன் சாலை மற்றும் ஔவை சண்முகம் சாலையில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் | 13.70 |
| 5. | வார்டு 18–ல் புதுத்தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் | 24.40 |
| 6. | வார்டு 21–ல் பிச்சைகாலஅம்மன் கோவில் வடக்கு பகுதி சின்னகுளம் சுற்றி தார் தளம் அமைத்தல் | 7.50 |

| | | |
|---|---|---|
| 7. | வார்டு 21–ல் வடக்கு சூரஙகுடி தட்டான்விளை கிழக்கு அற்றத்தில் உள்ள பம்புரூமை அகற்றி சாலை விரிவாக்கம் செய்து மழை நீர் வடிகால் ஓடை அமைத்தல் | 6.70 |
| 8. | வார்டு 29 –ல் பிள்ளையார் கோவில் தெரு, அஞ்சுதெரு, வண்ணார்தெரு, ஒற்றை தெரு மற்றும் சிறு தெருக்களில் காஙகீரீட் சாலைகள் அமைத்தல் | 5.70 |
| 9. | வார்டு 29 முதலிமார் தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 13.20 |
| 10. | வார்டு 34–ல் குறுந்தெரு பூஙகாவில் வாலிபால் விளையாட்டு மைதானத்தை சுற்றி ஒயர் தடுபபு வேலி மற்றும் மின் விளக்குகள் அமைத்தல் | 9.70 |
| 11 | வார்டு 36–ல் முதலியார்விளை மற்றும் சேவியர் நகரில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர்பிளாக் அமைத்தல் | 25.00 |
| 12. | வார்டு 37–ல் முருகன் சன்னதி தெரு, பைத்துமால் தெரு பகுதியில் சாலை பழுதினை சரி செய்து பேவர் பிளாக் அமைத்தல் | 13.00 |
| 13. | வார்டு 40–ல் வட்டகரை பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் | 9.10 |
| 14. | வார்டு 40 –ல் பட்டகசாலியன்விளை பெருமாள் நகர் பகுதியில் தார்சாலை பழுதினை சரி செய்தல் | 8.60 |
| 15. | வார்டு 40–ல் சின்னவண்ணான்விளை பத்திரகாளியம்மன் கோவில் கிழக்கு பக்கம் பேவர் பிளாக் அமைத்தல் | 6.10 |
| 16. | வார்டு 41–ல் ஹோலிகிராஸ் சிறுவர் பூஙகா பராமரிப்பு செய்தல் | 7.20 |
| 17. | வார்டு 42–ல் விவேகானந்தா சாலை மற்றும் குறுக்கு தெருக்களில் பேவர் பிளாக் அமைத்தல் | 17.80 |
| 18. | வார்டு 47–ல் M.G.R நகரில் பேவர் பிளாக் அமைத்தல் | 16.80 |
| 19. | வார்டு 47–ல் சித்திரை ராஜபுரம் பகுதியில் சமுதாய நலக்கூடம் கட்டுதல் | 8.00 |
| 20. | வார்டு 50–ல் புன்னை நகர் ஜஙஷன் முதல் ராமன் புதுார் ஜஙஷன் வரை மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் | 6.60 |
| 21. | வார்டு 50–ல் அழகு சிஙகம் குமாரவேல் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைத்தல் | 7.40 |
| 22. | வார்டு43–ல் ஜேக்கப்தெரு, நல்ல மேய்யப்பன் சாலையில் பேவர் பிளாக் அமைத்தல் | 25.00 |

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 2845/2014/இ1

**தீர்மான எண் : 331 – அனுமதிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சியில் பணியாற்றும் வெளிபுற பணியாளர்களை அவ்வப்போது அவசர பணியின் நிமித்தம் தொடர்பு கொள்ளும் விதம் 45 எண்ணம் Walke talke வாஙகவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,20,000/– மன்றத்தின் ஒப்புதலுக்கு

<u>அலுவலக குறிப்பு</u>– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 3180/2015/இ3

**தீர்மான எண் : 332 – அனுமதிக்கப்பட்டது.**

32. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள நகல் எடுக்கும் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்வதற்கு **31.03.2015** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. Nellai Computer Service – ரூ. **11666.90**
2. Friends Computes – ரூ. **10,936.65**

**<u>அலுவலக குறிப்பு</u>**– குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட குறைவாக பிரண்ட்ஸ் கம்ப்யூட்டர்ஸ், பாளையங்கோட்டை ரூ.**10,936.65/–** கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். **9587/2000/இ3**

**தீர்மான எண் : 333 – அனுமதிக்கப்பட்டது.**

33. இந்நகராட்சி பயன்பாட்டிற்கு மன்ற கூட்ட பொருள்கள் தயார் செய்ய ஏதுவாக புதிதாக Ricon Digital Multifuncitional Printer com copies Machine MP 250 ISP ஒளிநகல் இயந்திரம் ஒன்று வாஙகுவதற்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. பிரண்ட்ஸ் கம்ப்யூட்டர் – **0.01%** குறைவு

**<u>அலுவலக குறிப்பு</u>**– ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பிரண்ட் கம்ப்யூட்டர் நிறுவனம் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளதால் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். **69/14–15/இ3**

**தீர்மான எண் : 334 – அனுமதிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சி அலுவலக பிரிவுகள் மற்றும் வசூல் மையஙகளுக்கு தேவையான கணனிகள் மற்றும் பிரிண்டர்கள் வாஙக கடந்த **10.03.2015** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. திரு. I. பாஸ்கரன் – அஙகீகாரம் பெற்ற விற்பனையாளர் இல்லை என்பதால் ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டது.
2. ACT ஆட்டோமேசின் – ரூ.**209,600/–**

**<u>அலுவலக குறிப்பு</u>**– வ.எண். 1 அஙகீகாரம் பெற்ற விற்பனையாளர் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யலாம் மற்றும் ACT Automation ஒப்பந்தப்புள்ளியில் I-5 மற்றும் I-7 மாடல் கணனிகள் மற்றும் Laser Jet பிரிண்டர்ஸ் வாஙக ஒன்றுக்கு ரூ.**2,09,600/–** கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். **12586/2014/இ3**

**தீர்மான எண் : 335 – அனுமதிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சி வார்டு எண்.27 குமரி காலனி, காமராஜபுரம் சர்ச்தெரு, சகரியா தெரு, ஆகிய தெருக்களில் 4 எண்ணம் மின் கம்பம் அமைத்து புதிய தெருவிளக்குகள் பொருத்துவதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**<u>அலுவலக குறிப்பு</u>**– அனுமதிக்கலாம்.

கோப்பு எண். **21356/2014/இ4**

**தீர்மான எண் : 336 – அனுமதிக்கப்பட்டது.**

36. இந்நகராட்சி பகுதிக்குட்பட்ட வடசேரி காந்தி மருத்துவமனை வளாகத்தில் புதிதாக நகர் நல வாழ்வு மையம் அமைக்கப்பட உள்ளதால் மேற்படி இடத்தில் அமைந்துள்ள பழுதடைந்த நகர் நல மையம் மற்றும் சத்துணவு கூடத்தை இடித்து அப்புறபடுத்தவும் அதற்காகும் செலவினம் ரூ.1,20,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு

**அலுவலக குறிப்பு–** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 6040/2015/இ3

**தீர்மான எண் : 337 – அனுமதிக்கப்பட்டது.**

37. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் புதிய போர்வெல் மற்றும் டேங்க் அமைக்கும் பணிக்கு தயாரிக்கபட்ட உத்தேச மதிப்பீடு தொகையை குடிநீர் நிதிலிருந்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வார்டு எண் 18 | மீரான் நகர், அனிதாநகர், பிரதோசியா நகர் பகுதிகளில் குடிநீர் மெயின் குழாய் பதித்தல் | ரூ.1.90 லட்சம் |
| வார்டு எண் 12 | பதினெட்டாம் படி டேங்க் அமைத்தல் | ரூ.1,50 லட்சம் |
| வார்டு எண் 35 | செட்டிதெரு குறுந்தெருவில் போர்வெல் | ரூ.3.00 லட்சம் |
| வார்டு எண் 22 | 1) கார்திகை வடலி போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| | 2) தாராவிளை போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| | 3) குருகுலம் சாலை போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| | 4) பூச்சிவிளாகம் போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| வார்டு எண்26 | 1) ஜோதி தெரு போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| | 2) ஜோதி தெரு மீன் கடை சமீபம் போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| | 3) ராஜாதெரு போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| | 4) அந்தோணிதெரு போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| வார்டு எண். 38 | வட்டவிளை போர்வெல் அமைக்க | ரூ.3.25 லட்சம் |
| வார்டு எண். 48 | பெரிய விளை போர்வெல் அமைக்க | ரூ.3.00 லட்சம் |
| | மொத்தம் | ரூ. 38.65 |

**அலுவலக குறிப்பு–** அனுமதிக்கலாம். கோப்பு எண். 5208/2015/இ2

**தீர்மான எண் : 338 – அனுமதிக்கப்பட்டது.**

38. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2015–16 ஓராண்டுக்கு மட்டும உரிமம் வழஙகிட 05.02.2015 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.167 நாள்.26.02.2015–ன் படி திரு. P. மாகீன் என்பவரால் கையொப்பம் மட்டும் இடப்பட்டு பெயர் மற்றும் முகவரி குறிப்பிடாமல் ரூ.1,39,99,999/–க்கு கேட்ட ஒப்பந்தப்பள்ளியை அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில்

ரூ.1,02,51,500/—க்கு கேட்ட திரு. P. மனோகரன் என்பவரால் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டதற்கிணஙக வழக்கு எண்.WP (MD) No:2985/15 மற்றும் MP (MD) Nos, 2 மற்றும் 3/2015—ன் மீதான நீதிமன்ற உத்தரவு நாள்.30.03.2015 —ன் படி திரு. P. மனோகரன் என்பவரிடம் உரிமத்தொகை ரூ.1,39,99,999/— சேவைவரி ரூ.17,30,400/— வருமானவரி ரூ.2,80,000/— மற்றும் தொழில் வரி ரூ.2,346 சேர்த்து மொத்தம் ரூ.1,60,12,745/— பெற்று மேற்படியாருக்கு வடசேரி கனகமூலம் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழஙகிட உத்தரவிடப்பட்டது. மேற்படி நீதிமன்ற உத்தரவின்படி திரு. P. மனோகரன் என்பவருக்கு 2015—16 அதாவது 01.04.2015 முதல் 31.03.2016 வரை ஓராண்டுக்கு மட்டும் வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் உத்தரவு 31.03.2015—ன் அன்று உத்தரவு வழஙகப்பட்டது. மேற்படி நீதிமன்ற உத்தரவு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>— மன்ற பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 21003/2014/அ14

**தீர்மான எண் : 339 — மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.**

39. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2015—16 ஓராண்டுக்கு மட்டும் உரிமம் வழஙகிட 05.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.167 நாள்.26.02.2015—ன் படி திரு. P. மாகீன் என்பவரால் கையொப்பம் மட்டும் இடப்பட்டு பெயர் மற்றும் முகவரி குறிப்பிடாமல் ரூ.1,39,99,999/—க்கு கேட்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் ரூ.1,02,51,500/—க்கு கேட்ட திரு. P. மனோகரன் என்பவரால் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டதற்கிணஙக வழக்கு எண்.WP (MD) No:2985/15 மற்றும் MP (MD) Nos, 2 மற்றும் 3/2015—ன் மீதான நீதிமன்ற உத்தரவு நாள்.30.03.2015 —ன் படி திரு. P. மனோகரன் என்பவரிடம் உரிமத்தொகை ரூ.1,39,99,999/— சேவைவரி ரூ.17,30,400/— வருமானவரி ரூ.2,80,000/— மற்றும் தொழில் வரி ரூ.2,346 சேர்த்து மொத்தம் ரூ.1,60,12,745/—ஐ 30.03.2015 தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் பெற்றிடவும் வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் உரிமம் வழஙகிடவும் உத்தரவிடப்பட்டது. மேற்படி நீதிமன்ற உத்தரவின்படி திரு. P. மனோகரன் என்பவரால் ரூ.50.00 இலட்சம் நீதி மன்றம் மூலம் வஙகி வரைவோலையாக இந்நகராட்சியில் செலுத்தப்பட்டது. அதன்படி மேற்படி மொத்த தொகை ரூ.1,60,12,745/—ல் ரூ.50.00 இலட்சம் போக மீதித்தொகை ரூ.1,10,12,745/—ஐ 5.4.2015 தேதிக்கு முன்பு செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மேற்படி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2015—16 ஓராண்டுக்கு மட்டும் அனுபவித்து கொள்ள திரு. P. மனோகரன் என்பவருக்கு 31.03.2015 அன்று உரிம உத்தரவு வழஙகப்பட்டது. மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டும் மேற்படி நிலுவை தொகை ரூ.1,10,12,745/—ஐ நீதிமன்ற உத்தரவின்படி மேற்படியாளரால் இந்நகராட்சியில் செலுத்தவில்லை. இது நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்காமல் நகராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்துவதாக உள்ளதால் மேற்படியாருக்கு வழஙகப்பட்ட உத்தரவை 2015—16—ம் ஆண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்ட பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரத்து செய்து மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>— அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 21003/2014/அ14

## 10.04.2015 தேதிய நகர்மன்ற அவசர கூட்டப்பொருள் 39—ன் கூடுதல் அலுவலக குறிப்பு

இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2015—16 ஓராண்டுக்கு மட்டும் உரிமம் வழஙகிட 05.02.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதில் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.167 நாள்.26.02.2015—ன் படி திரு. P. மாகீன் என்பவரால் கையொப்பம் மட்டும் இடப்பட்டு பெயர் மற்றும் முகவரி குறிப்பிடாமல் ரூ.1,39,99,999/—க்கு கேட்ட ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் ரூ.1,02,51,500/—க்கு கேட்ட திரு. P. மனோகரன் என்பவரால் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டதற்கிணஙக வழக்கு எண்.WP (MD) No:2985/15 மற்றும் MP (MD) Nos, 2 மற்றும் 3/2015—ன் மீதான நீதிமன்ற உத்தரவு நாள்.30.03.2015 —ன் படி திரு. P. மனோகரன் என்பவரிடம் உரிமத்தொகை ரூ.1,39,99,999/— சேவைவரி ரூ.17,30,400/— வருமானவரி ரூ.2,80,000/— மற்றும் தொழில் வரி ரூ.2,346 சேர்த்து மொத்தம் ரூ.1,60,12,745/—ஐ 30.03.2015 தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் பெற்றிடவும் வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் உரிமம் வழஙகிடவும் உத்தரவிடப்பட்டது. மேற்படி நீதிமன்ற உத்தரவின்படி திரு. P. மனோகரன் என்பவரால் ரூ.50.00 இலட்சம் நீதிமன்றம் மூலம் வஙகி வரைவோலையாக இந்நகராட்சியில் செலுத்தப்பட்டது. அதன்படி மேற்படி மொத்த தொகை ரூ.1,60,12,745/—ல் ரூ.50.00 இலட்சம் போக மீதித்தொகை ரூ.1,10,12,745/—ஐ 5.4.2015 தேதிக்கு முன்பு செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு மேற்படி கனகமூலம் தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2015—16 ஓராண்டுக்கு மட்டும் அனுபவித்து கொள்ள திரு. P. மனோகரன் என்பவருக்கு 31.03.2015 அன்று உரிம உத்தரவு வழஙகப்பட்டது. மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டும் மேற்படி நிலுவை தொகை ரூ.1,10,12,745/—ஐ நீதிமன்ற உத்தரவின்படி மேற்படியாரால் இந்நகராட்சியில் செலுத்தவில்லை. இது நீதிமன்ற உத்தரவை கடைபிடிக்காமலும் நகராட்சிக்கு நிதியிழப்பை ஏற்படுத்துவதாவும் இருந்ததால் மேற்படியாருக்கு வழஙகப்பட்ட உத்தரவை 2015—16—ம் ஆண்டு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்ட பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரத்து செய்து மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டது. இந்நிலையில் திரு. P. மனோகரன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டவழக்கு எண் . MP (MD) No. 4/2015 WP (MD) No:2985/15-ன் மீதான 09.04.2015 தேதிய உத்தரவில் மேற்படி நிலுவை தொகையினை 15.04.2015 —ம் தேதி பிற்பகல் 5.00 மணிக்குள் செலுத்திக்கொள்ள கால அவகாசம் வழஙகப்பட்டுள்ளது. எனவே நீதிமன்ற உத்தரவின் படி நிலுவை தொகை செலுத்த கால அவகாசம் வழஙக வேண்டும் என்பதால் மேற்படி உரிமத்தை ரத்துசெய்ய வைக்கப்பட்ட பொருள் மீதான நடவடிக்கையை 15.04.2015 தேதி வரை நிறுத்தி வைக்கலாம்.

**தீர்மான எண் : 340 – நீதிமன்ற உத்தரவுப்படி 15.04.2015 மாலை 5 மணிக்கு குத்தகைதாரரால் செலுத்த வேண்டிய மீதமுள்ள பாக்கி தொகையை கட்ட தவறினால் குத்தகை ரத்து செய்து மறுஏலம் விட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.**

**மேலும் சந்தை வியாபாரிகள் சார்பில் தாஙகள் தற்காலிக கடைகளில் இருந்து வருவதாகவும் எஙகளுடைய வருமானமும், சுகாதாரமும் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், வியாபாரிகள் அனைவரும் மன உளைச்சலில் இருந்து வருவதாகவும் மேலும் குத்தகைதாரர் நகராட்சி விதிமுறைகளை மீறி கூடுதல் வாடகை கேட்டு வருகிறார்கள் எனவும் இதில் நகர்மன்றம் தலையிட்டு நகராட்சியால் முன்வைக்கப்பட்ட வாடகை மட்டுமே வசூல் செய்ய வேண்டும். மேலும் நகராட்சிக்கு சொந்தமான வடசேரி கனகமூலம் சந்தையில் வேலைகள் நடைபெற்று வருவதால் தற்காலிக கடைகளிலேயே இருந்து வருவதாகவும் குத்தகைதாரர் எந்த வித ஆக்ரமிப்போ புதிய கடைகளோ நகராட்சி விதிகளை மீறி கட்ட அனுமதி தரக்கூடாது என்ற கோரிக்கையை தலைவரிடம் அளித்து உள்ளார்கள்.**

**எனவே நகராட்சி சட்ட விதிமுறைகளை மீறி வடசேரி கனகமூலம் தினசரி சந்தையில் எந்தவித ஆக்ரமிப்போ (அ) கூடுதல் கடைகளோ கட்டக்கூடாது எனவும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூல் செய்யக்கூடாது எனவும், மேலும் நகராட்சியால் முத்திரை குத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் அடஙகிய ரசீதுகளை மட்டுமே வாடகைதாரர்களுக்கு குத்தகைதாரர் வழஙக வேண்டும். மேலும் எந்தவிதமான பராமரிப்பு பணியும் நகராட்சி அனுமதி இல்லாமல் குத்தகைதாரர் செய்யக்கூடாது எனவும் மன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.**

40. இந்நகராட்சிக்குட்பட்ட 18 –வது வார்டு ஆணைப்பாலம் சமீபம் உள்ள நாகர்கோவில் நகராட்சிக்கு சொந்தமான ஆசாத் மெமோரியல் பூஙகாவில் பராமரிப்பு பணிக்கு அனுமதி வேண்டி திரு. வேழவேந்தன் தலைவர், விவேகானந்தா இளைஞர் நற்பணி மன்றம் 78,பரசுராமன் தெரு, இடலாக்குடி என்பவரிடமிருந்து 04.02.2015–ல் மனு வரப்பெற்றுள்ளது.

மேற்படி பூஙகா நகர புல எண்.S 6/57(PT) –ல் 194.208 $m^2$ பரப்பில் கேப் ரோட்டில் அமைந்துள்ளது. விவேகானந்தா நற்பணி மன்றத்திற்கு கீழ் காணும் நிபந்தனைகளின்படி பராமரிப்பு பணிக்கு ஒப்படைக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வேண்டப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) பூஙகாவிற்கு நுழைவு கட்டணம் வசூலிக்ககூடாது
2) விரிவு அபிவிருத்தி கட்டிட பணிகள் ஏதும் மேற்க்கொள்ளகூடாது.
3) நகராட்சி அனுமதியற்ற விளம்பர பலகை ஏதும் அனுமதிக்ககூடாது.
4) நகராட்சி பூஙகாவாக மட்டும் உபயோகப்படுத்தவேண்டும்.
5) கூட்டஙகள், அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகள் ஏதும் பூஙகாவில் நடத்த அனுமதிக்கக்கூடாது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– நகராட்சி சட்டவிதிகளின்படி ஓராண்டுகாலம் வரை பராமரிப்பு பணி மேற்க்கொள்ளமேற்க்கண்ட நற்பணி மன்றத்திற்கு அனுமதி வழஙகலாம்.

கோப்பு எண். 2048/2015/எப்1

**தீர்மான எண் : 341 – அனுமதிக்கப்பட்டது.**

41. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தில் தாய்ப்பால் ஊட்டும் பெண்களுக்கு Mother Feeding Shelter அமைக்க சுமார் 15' x 10' அகலத்தில் கூரை வேயப்பட்ட ( Roofel Area ) பகுதியில் ஒதுக்கீடு செய்ய Mid-Town ரோட்டரி கிளப் தலைவர் திரு. அப்துல் சலாம் என்பவரிடமிருந்து மனு வரப்பெற்றுள்ளது.

மேற்படி திட்டம் தாய்மார்களுக்கு பயன் உள்ள திட்டமாக அமைவதால் பேருந்து நிலைய நடுப்பகுதியில் உள்ள Bus Shelter–ன் நடுப்பகுதியில் சுமார் 8' x 6' அளவில் தற்காலிகமாக தடுப்புகள் அமைத்து கூரையில்லாமல் பயன்படுத்த ஒதுக்கீடு செய்து மேற்படி பணியை ரோட்டரி கிளப் Mid-Town செய்ய அனுமதி வழஙக மன்றத்தின் ஒப்புதலுக்கு வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– அனுமதி வழஙகலாம்

கோப்பு எண். 5118/2015/எப்1

**தீர்மான எண் : 342 – அனுமதிக்கப்பட்டது.**